JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **201/2015** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | விஜயகுமார் | Village | முருகம்பாளையம், விஜயமங்கலம் |
| Father's Name | ராஜ் | Taluk | |
| | | Age | |

**A**2 **present**. **A**1, **A**3 **absent**. **Petition filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 24.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு தறித் தொழில் செய்து வருகிறேன். 15.03.2015 ம் தேதி இரவு 7.00 மணிக்கு முருகம்பாளையத்தில் உள்ள என் வீட்டில் நின்று கொண்டிருந்தேன். ஒரு வீடு தாண்டி துரையன் வீடு உள்ளது. என் அக்கா மீது துரையன் என்பவர் வண்டியை மேலே விட வந்தார். நான் துரையிடம் எதற்காக வேகமாக வந்தாய் என் அக்கா மீது விட வந்தாய் என்று கேட்ட போது நான் அப்படி தான் விடுவேன் என்று சொன்னார். அவர் என்னை தகாத வார்த்தை பேசி என்னை அடிக்க வந்துவிட்டார். பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து தடுக்காட்ட துரை என் அக்காவை காதில் கடித்து விட்டார். என்னையும் இடது கையில் கடித்து விட்டார். வேறு யாரும் என்னை அடிக்கவில்லை. எனக்கு மயக்கம் வந்தது போல் ஆகிவிட்டது. துரை என்னை பார்த்து என்றைக்கு இருந்தாலும் என்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டினார். என்னையும், அக்காவையும் என் அக்காவின் கணவர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். ஆஜரில் உள்ள 2 ம் எதிரி என் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். துரை இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. **(எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு**

**அனுமதிக்கப்பட்டுள்ளது).** மற்றொரு எதிரி மஞ்சுளாவை தெரியும். எதிரிகள் மூவரும் தற்போது ஊரில் இல்லை.

2. மருத்துவமனையில் நானும், எனது அக்காவும் ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தோம். மறுநாள் பெருந்துறை காவல் நிலையத்தில் இருந்து போலீசார் வந்து என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்க நான் நடந்த விவரங்களை கூறினேன்.

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. 1 பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

1. 15.03.2015 ம் தேதி இரவு 7.00 மணிக்கு சம்பவத்தின் போது துரை என்கிற கருப்புசாமி என்னை கையால் அடித்து கீழே தள்ளினார் என்றும் அப்போது துரை என்கிற கருப்புசாமியின் அம்மா மற்றும் அக்கா 2 மற்றும் 3 ம் எதிரிகள் இருவரும் ஓடி வந்து எனது அக்காவை கீழே தள்ளினார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் 2 ம் எதிரி மற்றும் 3 ம் எதிரி மஞ்சுளா எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி அவர்கள் எதுவும் செய்யவில்லை என்று சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** 15.03.2015 ம் தேதி என் அக்கா எங்கு நின்று கொண்டிருந்தார் என்றால் என் அக்காவீட்டு வாசல் முன்பாக நின்று கொண்டிருந்தார். என் அக்கா வீடு மண் பாதைக்கு தென்புறமாக உள்ளது என்றால் சரிதான். கராண்டிபாளையத்தில் இருந்து தெற்கு நோக்கி முருகம்பாளையம் வர வேண்டும் என்றால் சரிதான். கராண்டிபாளையத்திலிருந்து முருகபாளையம் செல்வதற்கு ரோடு செல்கிறது என்றால் சரிதான். கராண்டிபாளையம் செல்லும் ரோடு தார் ரோடு என்றால் சரிதான். மண் ரோட்டிற்கு தென்புறமாக தான் என் அக்கா வீடு உள்ளது என்றால் சரிதான்.

2. என் அக்கா ரோட்டின் மீது தான் நின்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். என் அக்கா வேலைக்கு சென்று விட்டு எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தார் என்றால் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தார். துரை என்கிற கருப்புசாமி இருசக்கர வாகனத்தில் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தார் என்றால் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தார். துரை என்கிற கருப்புசாமி வீடு மண் ரோட்டிற்கு வடபுறமாக உள்ளது என்றால் சரிதான். துரை என்கிற கருப்புசாமி வீட்டிற்கும் என் அக்கா வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 20 –30 அடி இருக்கும்.

3. மண் பாதை எத்தனை அடி அகலம் என்றால் 10 அடிக்குள் இருக்கும். துரை என்கிற கருப்புசாமி என் அக்கா மீது வண்டியை இடித்து விட்டாரா என்றால் ஆமாம். போலீசார் விசாரணையில் துரை என்கிற கருப்புசாமி என் அக்கா மீது வண்டியில் மோதி விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம் சொல்லியுள்ளேன். என் அக்கா வீட்டை ஒட்டி மேபுறமாக மஞ்சுளா வீடு 3 வதாக உள்ளது என்றால் சரிதான். மங்சுளா வீட்டிற்கும் என் அக்கா வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 20 அடி தூரம இருக்கும். என் அக்காவை யார் தூக்கி விட்டார்கள் என்றால் என் அக்காவின் கணவர் தூக்கி விட்டார். போலீசார் விசாரணையில் என் அக்காவை என் அக்காவின் கணவர் தூக்கி விட்ட விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு அடிப்பட்டவுடன் மயக்கம் ஆகி விட்டது 10 ஆண்டுகள் ஆகி விட்டதால் என்ன நடந்தது என்று மறந்து விட்டது.

4. துரை என்கிற கருப்புசாமி என்னை கையால் அடித்தார் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 9.00 மணி இருக்கும். புகார் யார் கொடுத்தது என்றால் என் அக்காவின் கணவர் கொடுத்திருப்பார் மறுநாள் என்னையும விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். துரை என்கிற கருப்புசாமியை தவிர வேறு எதிரிகள் என்னை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். துரை என்கிற கருப்புசாமி என் அக்கா மீது வண்டியை விட வரும் போது நான் எங்கு நின்று கொண்டிருந்தேன் என்றால் வீட்டு வாசல்படியில் நின்று கொண்டிருந்தேன்.

**5. துரை என்கிற கருப்புசாமி வீட்டிற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 30 – 50 அடி இருக்கும். துரை என்கிற கருப்புசாமிக்கும் என் அக்காவின் குடுமபத்திற்கும் முன் பகை இருந்தது என்றால் சரிதான். துரை என்கிற கருப்புசாமி என் அக்காவின் மீது வண்டியில் வந்து மோத வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. துரை என்கிற கருப்புசாமிக்கும் ,இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை